
# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

-சமூக சீர்திருத்த மாத இதழ்-

THIRU QURAN NARCHEYDHI MALAR - 2019 FEBRUARY

மலர்: 12 இதழ்: 5 பிப்ரவரி 2019 விலை: ரூ. 10

- பிறப்பும் மரணமும் தடுக்க முடியாத நிகழ்வுகள்!
- மரணத்தைப் பின் தொடர்வது என்ன?
- மரணத்தை தவிர்க்க இயலாது. அதற்குப்பின் உள்ளதைத் தவிர்க்க இயலுமா?



- மண்ணோடு மண்ணாகிப் போய்விடுமா இந்த மனிதன் என்ற மாபெரும் அற்புதம்?
- அது வளர்த்து வந்த ஆசாபாசங்களும் அறிவும் ஆற்றலும் உறவுகளும் திடீரென முறிவதா?
- அது விதைத்த வினைகள் அறுவடையின்றி அழிவதா?
- அது செய்த தியாகங்களுக்குப் பரிசேதும் இல்லையா?
- அது செய்த அக்கிரமங் களுக்கு தண்டனை ஏதும் கிடையாதா?

## மறுக்க முடியுமா மறுமை வாழ்வை?

## மண்ணறைக்குள் என்ன நடக்கிறது?

# இறைவனையும் மறுமையையும் மறுப்பது பகுத்தறிவாகுமா?

● நீங்கள் எப்படி இறைவனை நம்ப மறுக்கிறீர்கள்? உயிரற்றோராக இருந்த உங்களுக்கு அவனே உயிரூட்டினான் பின்பு அவன் உங்களை மரிக்கச்செய்வான் மீண்டும் உங்களை உயிர் பெறச் செய்வான் இன்னும் நீங்கள் அவன் பக்கமே திருப்பிக்கொண்டுவரப் படுவீர்கள். (திருக்குர்ஆன் 2:28)




● மனிதனை ஒரு துளி இந்திரியத்திலிருந்து நாமே நிச்சயமாகப் படைத்தோம் என்பதை அவன் பார்க்கவில்லையா?........ .மேலும், அவன் தன் படைப்பை மறந்துவிட்டு, அவன் நமக்காக ஓர் உதாரணத்தையும் கூறுகின்றான்: ‘எலும்புகள் அவை மக்கிப் போய் விட்ட பின் அவற்றை உயிர்ப்பிப்பது யார்?’’ என்று.

● “முதல் முதலில் அவற்றை உண்டு பண்ணியவனே (பின்னும்) அவற்றுக்கு உயிர் கொடுப்பான். அவன் எல்லாவகைப் படைப்புகளையும் நன்கறிந்தவன்’’ என்று (நபியே!) நீர் கூறுவீராக! (திருக்குர்ஆன் 36:77-79)

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய

அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

# THIRU QURAN NARCHEYDHI MALAR

மலர்: 12 இதழ்: 5 பிப்ரவரி 2019 விலை: ரூ. 10

பொருளடக்கம்

தட்டிக்கேட்க யாருமில்லை என்ற திமிர்! -2
வாழ நினைப்போம்... வாழுவோம்! -4
மரணத்தைப் பற்றி அலட்சியமாக இருக்க முடியுமா?-7
காத்திருக்கும் மறுமையும் மண்ணறையும் -8
மரணம் நெருங்கிவிட்ட வேளை -11
மரணவேளையில் இருந்து மண்ணறை வரை -15
மரண சிந்தனை மானுடத்தை வாழவைக்கும்! -18
மண்ணறைக்குள் என்ன நடக்கிறது?-21
மரணத்தை நெருங்கியவரை நரகத்தில் இருந்து காப்பாற்ற முடியுமா? -22
வாசகர் எண்ணம் -24

**வாசகர்கள் கவனத்திற்கு...**

- இவ்விதழைப் பெறவிரும்பும் அன்பர்கள் தங்களது தெளிவான விலாசத்தை **9886001357** என்ற எண்ணுக்கு **SMS** அனுப்பவேண்டும்.
- மாற்று மத அன்பர்களுக்கு இவ்விதழ் ஒரு வருடம் வரை அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்பினால் அவர்கள் **SMS** மூலம் **RESEND QNM** என்று டைப் செய்து அனுப்பவேண்டும். சந்தா அனுப்பத் தேவையில்லை.
- முஸ்லிம் அன்பர்களுக்கு 4 மாதம் வரை இவ்விதழ் இலவசமாக அனுப்பிவைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்புவோர் சந்தா அனுப்ப வேண்டும்.
- ஓராண்டு சந்தா **Rs.120-**
- இதழ் மொத்தமாக வேண்டுவோர், சந்தாதாரர்கள் குறைபாடுகள் தொடர்பு எண்: **08867971835**

Published from:

**House of Peace,**

PO Box no. 1726, No.501, 3rd cross, Syed Block,
AS palya Bangalore 560017

**Ph. 9886001357 email: amkasim@yahoo.com**

**www.quranmalar.com www.waytoparadise.in**

# தட்டிக்கேட்க யாருமில்லை என்ற திமிர்!

கீழ்கண்டவை வெறும் ஓரிரு நாள் நிகழ்வுகள் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்:

**● மகாராஷ்டிராவின் மதுபான பார்களில் பெண்கள் நடனமாட விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கி உச்சநீதிமன்றம் உத்தரவு!**

**● தலைவிரித்தாடும் சாதிக்கொடுமையால், தாயின் சடலத்தை ஐந்து கிலோ மீட்டர் துரம் சைக்கிளில் எடுத்துச் சென்று இறுதிச்சடங்கு செய்த மகன்!–**
**(நாள் 17 –1–19 இடம்: ஒடிஸா)**

**● கல்லூரி மாணவரை கொலை செய்துவிட்டு அவரது காதலியை பாலியல் வன்கொடுமை செய்த கும்பல்! குற்றவாளிகளைப் பிடிக்க 3 தனிப்படைகள் அமைத்து போலீஸார் தீவிர தேடுதல் வேட்டை நாள் 17 –1–19, இடம்: திருச்சி**

**● கள்ளக்காதல் ஜோடி தற்கொலைக்கு முயன்ற சம்பவத்தில் காதலி உயிரிழப்பு!**

**● கடன் வாங்கித்தருவதாகக் கூறி வரவழைத்து இளம்பெண்ணை பாலியல் வன்புணர்வு செய்த கும்பல்!**
**இடம்: டெல்லி நாள் 16–1–19**
(**News7Tamil** *நாள்:17-1-19*)



### திமிருக்கான காரணம்

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக பெருகும் இக்குற்றங்களுக்கும் அக்கிரமங்களுக்கும் பாவங்களுக்கும் முக்கியமான ஒரு காரணம், இங்கு யாரும் எதையும் செய்யலாம், எதைச் செய்தாலும் தட்டிக் கேட்பதற்கு யாரும் இல்லை என்ற உணர்வுதான். படித்தவரில் இருந்து பாமரர் வரை, நீதிபதிகளில் இருந்து குற்றவாளிகள் வரை, அரசனில் இருந்து ஆண்டி வரை என யாருக்கும் இந்த உணர்வுதான். இதற்கு முக்கியமான காரணம் இங்கு நாம் வாழ்வது மட்டுமே வாழக்கை, நாம் இன்று அனுபவிப்பது மட்டுமே வாழ்க்கை, மரணத்தோடு முடிகிறது நம் வாழ்வு. நாம் இறந்து மண்ணோடு மண்ணாகி விட்டால் அனைத்தும் புதைக்கப்பட்டு விடுகிறது என்ற தாழ்ந்த, பகுத்தறிவுக்கு எதிரான சிந்தனைதான். நாம் இங்கு செய்த குற்றங்களுக்கு வேறு யாருக்கும் பதில் சொல்லவேண்டியது இல்லை, எந்த தண்டனையும் கிடையாது என்ற குறுகிய சிந்தனைதான் இவை அனைத்துக்கும் காரணமாகிறது.

உண்மை என்னவெனில் மனிதனது அனைத்து வினைகளும் துல்லியமாகப் பதிவாகிக் கொண்டிருகின்றன. எவையுமே விடப்படுவதில்லை. இன்று எங்கும் கண்காணிப்புக்காக பொருத்தப்படும் **CCTV** கேமராக்கள் அவற்றின் பார்வையில் படும் நிகழ்வுகளை பதிவு செய்வதை நாம் அறிவோம். அதைப்போலவே நம் ஒவ்வொருவரது

கண்களும் நமது நடவடிக்கைகளை இயற்கையாகவே பதிவு செய்து கொண்டிருக்கின்றன. அவை மட்டுமல்ல, நமது காதுகளும் தோல்களும் அதுபோலவே பதிவு செய்கின்றன என்றும் அவை மறுமையில் மனிதனுக்கெதிராக சாட்சி கூறும் என்றும் திருக்குர்ஆன் கூறுகிறது:

- **மேலும், இறைவனின் பகைவர்கள் (நரகத்)தீயின் பால் ஒன்று திரட்டப்படும் நாளில், அவர்கள் (தனித் தனியாகப்) பிரிக்கப்படுவார்கள். இறுதியில், அவர்கள்(அத்தீயை) அடையும் போது, அவர்களுக்கு எதிராக அவர்களுடைய காதுகளும், அவர்களுடைய கண்களும், அவர்களுடைய தோல்களும் அவை செய்துகொண்டிருந்தவை பற்றி சாட்சி கூறும். (திருக்குர்ஆன் 41:19,20)**

வேறு பலவகையிலும் நமது செயல்களின் பதிவுகள் நடந்து கொண்டிருந்தாலும் இவை ஒன்றே போதுமானவையாக இருக்கும் என்பதை நாம் அறியலாம்.

ஆம், மனிதன் பிறந்தது முதல் இறக்கும் வரை அவனோடு ஒட்டி உறவாடிக்கொண்டிருப்பவை அவனுடைய காதுகளும் கண்களும் தோல்களும். ஒலி அலைகள் காதுகளால் ஏற்கப்படுவதையும் ஒளி அலைகள் கண்களால் ஏற்கப்படுவதையும் அவற்றை உரிய இடங்களில் பதிவு செய்வதையும் இன்றைய அறிவியல் நமக்கு சொல்லித் தருகிறது. இவற்றோடு தோல்களும் நம் செயல்பாடுகளின் பதிவுகளைத் தாங்கி நிற்கின்றன என்று மேற்படி வசனம் எச்சரிக்கிறது. இறுதித்தீர்ப்பு நாளன்று விசாரணையின்போது அவை மனிதனைக் காட்டிக் கொடுக்கும்போது அங்கு நடக்கும் உரையாடலைப் படம்பிடித்துக் காட்டுகிறான் இறைவன்:

**41:21. அவர்கள் தம் தோல்களை நோக்கி, “எங்களுக்கு எதிராக நீங்கள் ஏன் சாட்சி கூறினீர்கள்?” என்று கேட்பார்கள் அதற்கு அவை: “எல்லாப் பொருட்களையும் பேசும்படிச் செய்யும் அல்லாஹ்வே, எங்களைப் பேசும்படிச் செய்தான்அவன்தான் உங்களை முதல் தடவையும் படைத்தான் பின்னரும் நீங்கள் அவனிடமே கொண்டுவரப்பட்டிருக்கிறீர்கள்” என்று கூறும்.**

**41:22. “உங்கள் காதுகளும், உங்கள் கண்களும், உங்கள் தோல்களும், உங்களுக்கு எதிராகச் சாட்சி சொல்லாமலிருக்கும் பொருட்டு, உ(ங்கள் பாவ)ங்களை நீங்கள் மறைத்துக் கொள்ளவில்லை அன்றியும், நீங்கள் செய்து கொண்டிருந்தவற்றில் மிகுதமானதை நிச்சயமாக அல்லாஹ் அறியமாட்டான் என்று நீங்கள் எண்ணிக் கொண்டீர்கள்.**

இன்று நாம் எந்தக் காரியத்தைச் செய்தாலும் காது, கண், தோல் இவற்றை மறைத்துக் கொண்டு செய்ய முடியாது. நம் ஒவ்வொருவரது கண்களும் காதுகளும் தோல்களும் நமது நடவடிக்கைகளை இயற்கையாகவே பதிவு செய்து கொண்டிருக்கின்றன. இவை மறுமைநாளில் நமக்கெதிரான சாட்சிகளாக வரும் என்பதைத் திருக்குர்ஆனில் இறைவன் எச்சரிக்கிறான்

உண்மையில் இறைவனைப் பற்றியும் இவ்வுலக வாழ்க்கையின் நோக்கம் பற்றியும் மக்கள் - குறிப்பாக இளைய தலைமுறை - பகுத்தறிவு பூர்வமான முறையில் கற்பிக்கப் படாதவரை இப்பெருகும் குற்றங்களுக்கு விடிவு ஏற்படாது என்பதை நாம் முதற்கண் உணரக் கடமைப்பட்டுள்ளோம். இஸ்லாம் அப்படிப்பட்ட ஒழுக்கம் விதைக்கும் கல்விக்குரிய அறிவுபூர்வமான வழிகளைக் கூறுகின்றது.

# வாழ நினைப்போம்... வாழுவோம்!

நாம் வாழும் வாழ்க்கை அர்த்தமுள்ளாதாக அமைய நாம் யார்? ஏனிங்கு வந்தோம்? இனியெங்கே செல்கிறோம்? இந்த வாழ்க்கையின் நோக்கம் என்ன? ... என்ற கேள்விகளை எழுப்பி இதற்கான விடைகளைத் தேடவேண்டும். அதற்குத்தானே பகுத்தறிவு என்பது கொடுக்கப்பட்டுள்ளது? பெற்றோர்களும் சரி, குழந்தைகளும் சரி, ஆசிரியர்களும் சரி, பெரும் ஆளுமைகளும் சரி இதை அறிய முனைப்பு காட்டவேண்டும். வாழ்க்கை நோக்கமற்றது என்றால் தற்கொலைகளில் தவறு காண முடியுமா?

அந்த வகையில் வாழ்க்கையைப் பற்றிய நமது குறுகிய கண்ணோட்டங்களை எல்லாம் சற்று ஒதுக்கிவைத்துவிட்டு கீழ்கண்ட உண்மைகளை சற்று சிந்தித்துப்பாருங்கள். வாழ்க்கை அர்த்தமுள்ளதே, வாழ்க்கை என்ற நமக்குத் தரப்பட்ட வாய்ப்பு மிகமிக உயர்ந்த இலட்சியம் கொண்டதே என்பது புலனாகும்.

**கருவறை தொடங்கி கல்லறைவரை...**

பிறப்பில் தொடங்கி மரணத்தில் முடிவடைகிறது நமது இப்போதைய வாழ்வு. நம்மைப் போல் பலரும் இங்கு வந்து போய்க்கொண்டு இருப்பதையும் காண்கிறோம். நமக்கு முடிவு உள்ளது போலவே இவ்வுலகும் ஒருநாள் அழிந்துவிடும் எனபதை இன்று அறிவியலே பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

அது போக, நாம் இன்று வாழ்ந்துக்கொண்டிருக்கும் பூமியின் அமைப்பையும் அதனைச் சுற்றி நடந்துகொண்டிருக்கும் இன்னபிற சமநிலை தவறாத இயக்கங்களையும் சற்று பாருங்கள். அனைத்துமே மனிதன் எனபவன் இங்கு வாழ்ந்துக்கொண்டு இருக்கிறான், அவனுக்கு எந்த பாதிப்பும் வந்துவிடக் கூடாது என்பதனால்தானே!

உதாரணத்திற்கு...

- தன்னைத்தானே சுற்றிக்கொண்டு சூரியனச் சுற்றிவரும் கோளம் பூமி. சூரியனிலிருந்து ஒரு வரையறுக்கப்பட்ட தூரத்தில் இக்கோளம் ஒரு வட்டப் பாதையில் உலா வருகிறது. இந்த தூரம் சற்று கூடிவிட்டால் என்ன நிகழும்? நாம் அனைவரும் குளிரினால் உறைந்து மடிந்து போவோம்! சற்று குறைந்து போனாலோ...? நாம் தாங்க முடியாத வெப்பத்தினால் கருகி மடிந்துவிடுவோம்!
- பூமி தன் அச்சின்மீது சுழலும் வேகம் வரையறுக்கப்பட்ட ஒன்று இது கூடவோ குறையவோ செய்தால் என்ன ஆகும்? அன்றாடம் நிலநடுக்கமும் புயலும் சுனாமியும்தான்!
- பூமியின் மேலுள்ள காற்றழுத்த மண்டலம்- இதன் அழுத்தம் சற்று குறைந்தாலோ அல்லது கூடினாலோ புயலினால் சீரழிக்கப் படுவோம் அல்லது பிராணவாயுவின் குறைவினால் மடிந்து போவோம்.
- இம்மாபெரும் பேரண்டத்தில் எண்ணற்ற கோள்கள் உலா வந்துகொண்டிருந்தாலும் நம் கோளில் மட்டுமே நமக்குத் தேவையான உணவு,நீர், காற்று போன்றவை கிடைத்துக் கொண்டிருக்கின்றன.

இவையும் இவைபோன்ற இன்னும் பல உண்மைகளும் எதைச் சுட்டிக்

காட்டுகின்றன?

மனிதன் என்ற ஜீவியை மையமாகக் கொண்டு அவனை வாழவைப்பதற்குத் தானே இம்மாபெரும் பிரபஞ்சம் இயக்கப்பட்டு வருகிறது! மனிதனில்லாத ஒரு பிரபஞ்சத்தை நீங்கள் கற்பனை செய்து பாருங்கள். பூமியும் சூரியனும் இன்ன பிற கோள்களும் வரையறைக்குள் சுழன்று கொண்டிருப்பதிலும் பூமி உணவு, நீர்,காற்று என்று மனிதனின் தேவைகளை உற்பத்திசெய்து கொண்டிருப்பதிலும் மேற்கூறப்பட்ட சமநிலை தவறாத இயக்கங்கள் நடைபெறுவதிலும் அர்த்தமில்லை என்பது நமக்குப் புலனாகும்.

இவ்வுண்மைகளை மனதில் இருத்தி இவற்றை இயக்கி வருபவன் கேட்கும் கேள்வியை செவியுறுங்கள்:

- **“நாம் உங்களைப் படைத்ததெல்லாம் வீணுக்காக என்றும், நீங்கள் நம்மிடத்தில் நிச்சயமாக மீட்டப்பட மாட்டீர்கள் என்றும் எண்ணிக் கொண்டீர்களா?” (திருக்குர்ஆன் 23:115.)**

நிச்சயமாக இவை எதுவும் வீணுக்காக அல்ல. ஒரு மகத்தான உறுதியான திட்டத்தின் கீழ்தான் நீங்கள் படைக்கப் பட்டிருக்கிறீர்கள். ஆம், இறைத்தூதர்கள் மூலமாகவும் இறைவேதங்கள் மூலமாகவும் காலாகாலமாக சொல்லப் படுகின்ற செய்தி.உண்மை என்பதையே பகுத்தறிவு நமக்கு எடுத்துச் சொல்கிறது. அது என்ன செய்தி?

- **பூமியிலுள்ளவற்றை நாம் அதற்கு அலங்காரமாக்கி வைத்தது அவர்களில் எவர்கள் நல்ல நடத்தையுள்ளவர்கள் என்பதை நிச்சயமாக நாம் சோதிப்பதற்காகவே. (திருக்குர்ஆன் 18:7)**

இத்தற்காலிக உலகு உங்களுக்கான ஒரு பரீட்சைக் கூடம். இதில் உங்கள் செயல்கள் பதிவு செய்யப்படுகின்றன. யார் இறைவனுடைய கட்டளைகளுக்கு கட்டுப்பட்டு வாழ்கிறார்களோ அவர்கள் இப்பரீட்சையில் வெற்றி பெறுகிறார்கள். அவர்களுக்கு சொர்க்கம் என்ற நிரந்தர வசிப்பிடம் உண்டு. யார் கட்டுப்படாமல் தான்தோன்றித்தனமாக வாழ்கிறார்களோ அவர்கள் இப்பரீட்சையில் தோல்வி அடைகிறார்கள். அவர்களுக்கு நரகம் என்ற நிரந்தர வேதனைகள் கொண்ட வசிப்பிடம்தான் கிடைக்கும்.

- **ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தைச் சுகித்தே ஆகவேண்டும் அன்றியும் - இறுதித் தீர்ப்புநாளில் தான், உங்க(ள் செய்கைக)ளுக்குரிய பிரதி பலன்கள் முழுமையாகக் கொடுக்கப்படும். எனவே எவர் (நரக) நெருப்பிலிருந்து பாதுகாக்கப்பட்டுச் சுவர்க்கத்தில் பிரவேசிக்குமாறு செய்யப்படுகிறாரோ. அவர் நிச்சயமாக வெற்றியடைந்து விட்டார். இவ்வுலக வாழ்க்கை மயக்கத்தை அளிக்கவல்ல (அற்ப இன்பப்) பொருளேயன்றி வேறில்லை. (திருக்குர்ஆன் 3:185 )**

எனவே நரக நெருப்பைத் தவிர்த்து சொர்க்கத்தை நோக்கி பயணிக்க விரும்பினால் நாம் செய்ய வேண்டியது என்ன? நமக்கு இறைவன் தந்துள்ள இந்த பொன்னான வாழ்க்கை என்ற வாய்ப்பை மிக்க கவனத்தோடு பயன்படுத்த வேண்டும். நம் செய்கைகளை அல்லது வினைகளை இறைவனின் பொருத்தத்துக்கு உகந்ததாக அமைத்துக் கொள்ள வேண்டுமானால் வாழ்வில் எது நன்மை எது தீமை எது புண்ணியம் அல்லது பாவம் என்பன பற்றி நாம் அறியவேண்டும்.

இவ்விடயத்தில் வழிகாட்டுவதற்காகவே இறைவன் இறைவேதங்களையும் இறைத்தூதர்களையும் ஒவ்வொரு காலங்களிலும் அனுப்பியுள்ளான். அந்த வரிசையில் இன்று வாழும் மக்களுக்கு நேர்வழி காட்ட அனுப்பப்பட்ட வேதமே திருக்குர்ஆன். அவ்வாறு அனுப்பப்பட்ட இறைத்தூதரே நபிகள் நாயகம் (ஸல்).

● **தன்னுடைய அடியார் மீது (சத்தியத்தையும், அசத்தியத்தையும் பிரித்துக் காட்டும்) இந்த ஃபுர்கானை (அதாவது குர்ஆனை) இறக்கி வைத்தவன் பெரும்பாக்கியம் நிறைந்தவனாக இருக்கின்றான்,. அகிலத்தார் அனைவருக்கும் (அவர்) எச்சரிக்கை செய்யக் கூடியவராக திகழ வேண்டும் என்பதற்காக! (திருக்குர்ஆன் 25:1)**

## இறைவனுக்குக் கீழ்படிதலே வெற்றிக்கு வழி

ஆக, உண்மையான வாழ்வின் வெற்றி என்பது இறைவன் நமக்காக அருளியுள்ள இந்த வழிகாட்டுதல்களை விருப்பு வெறுப்பின்றி ஆராய்ந்து அறிவதிலும் அதை உறுதியாகப் பின்பற்றி நடப்பதிலும்தான் உள்ளது. அந்த பின்பற்றுதல் அல்லது கீழ்படிதல்தான் அரபுமொழியில் இஸ்லாம் என்று அறியப்படுகிறது! நமக்காக வேண்டி இறைவன் இவற்றை அருளியிருக்க முன்னோர்கள் கலாச்சாரம் அல்லது வழக்கம் என்ற பெயரில் மனிதர்களால் மாசுபடுத்தப் பட்ட வேதங்களையும் உருவாக்கப்பட்ட இஸங்களையும் கொள்கைகளையும் மூடநம்பிக்கைகளையும் மனமுரண்டாக பின்பற்றுவோமேயானால் இறைவனின் கோபத்துக்கும் சாபத்துக்கும்தான் ஆளாவோம். மறுமையில் நரகமே நம் புகலிடம் ஆகும்.

● **திண்ணமாக, இஸ்லாம் மட்டுமே இறைவனிடம் (ஏற்புடைய) வாழ்க்கை நெறி ஆகும். (திருக்குர்ஆன் 3:19 )**

● **இஸ்லாமையன்றி (வேறொரு) மார்க்கத்தை எவரேனும் விரும்பினால் நிச்சயமாக அவரிடமிருந்து (அது) அங்கீகரிக்கப்பட மாட்டாது. மறுமையில் அவர் நஷ்டமடைந்தவராகவே இருப்பார். (திருக்குர்ஆன் 3::85)**

*(இஸ்லாம் என்றால் இறைவனின் ஏவல்-விலக்கல்களை ஏற்று வாழுதல்)*

# விருந்தினரைக் கண்ணியப்படுத்துங்கள்!

● **நபி(ஸல்) அவர்கள் (பின்வருமாறு) கூறியதை என் காதுகள் செவியேற்றன, என் உள்ளம் அதை மனனமிட்டது:**

**“விருந்துபசாரம் மூன்று நாள்களாகும். (அவற்றில்) ‘அவரின் கொடையும் அடங்கும்.”**

**“அப்போது அவரின் கொடை என்ன?’ என்று கேட்கப்பட்டது.**

**நபி(ஸல்) அவர்கள், ‘(அவரின் கொடை) ஒரு பகல் ஓர் இரவு (உபசரிப்பு) ஆகும்’ என்று கூறிவிட்டு, ‘இறைவனையும் இறுதி நாளையும் நம்பிக்கை கொண்டவர் தம் விருந்தினரைக் கண்ணியப்படுத்தட்டும். மேலும், இறைவனையும் இறுதி நாளையும் நம்பிக்கை கொண்டவர் (ஒன்று) நல்லதைப் பேசட்டும் அல்லது வாய்மூடி இருக்கட்டும்’ என்றார்கள்.**

**அறிவிப்பவர்:அபூ ஷுரைஹ் அல்அதவீ அல்குஸாஈ(ரலி), ஆதாரம் :**

# மரணத்தைப் பற்றி அலட்சியமாக இருக்க முடியுமா?

மரணத்துக்குப் பின் நம் நிலை என்ன? மக்களிடையே மூன்று கருத்துக்களை நாம் பரவலாகப் பார்க்கமுடிகிறது.

1. நாம் இருக்கமாட்டோம். மண்ணோடு மண்ணாகப் போய்விடுவோம்.

2. ஆத்மாவிற்கு அழிவில்லை. எனவே மீண்டும் மீண்டும் பல பிறவிகள் எடுப்போம்.

3. இறைவேதங்கள் கூறுவது போல் மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப்படுதல்: நம் செயல்களுக்குக் கூலி கொடுக்கப் படுவோம். நமது பாவ புண்ணியங்களுக்கு ஏற்றவாறு நமக்கு நிரந்தர நரகமோ அல்லது சொர்க்கமோ கிடைக்கும்

மேற்படி கருத்துக்களில் நமது கருத்து எந்த ஒன்றாகவும் இருக்கலாம் ஆனால்...



- மேற்கண்ட மூன்று கருத்துக்களில் ஏதோ ஒன்றுதான் சாத்தியம். மூன்றுமே ஒரே நேரத்தில் சாத்தியப்படுவது முடியாத ஒன்று.
- நமது கருத்துக்காக அல்லது ஊகங்களுக்காக உண்மை அல்லது வாஸ்தவம் வளைந்து கொடுக்கப் போவது இல்லை.
- முதல் இரண்டில் எது நடந்தாலும் நாம் தப்பிக்க வாய்ப்புண்டு.
- மூன்றாவது விஷயம் நடக்குமானால் நாம் தப்பிக்க வழியில்லை.

எனவே பகுத்தறிவு நமக்குக் கற்றுத்தரும் பாடம் என்னவென்றால் அந்த மூன்றாவது நிலையை எதிர்கொள்ள நம்மை நாமே தயார் செய்து கொள்வதுதான் பாதுகாப்பான வழிமுறை என்பதுதான். மனித இயற்கையும் அதுவே. உதாரணமாக ஜெர்மனி அல்லது சுவீடன் நாட்டிலிருந்து உங்களுக்கு ஒரு இன்டர்வ்யூ அல்லது ஒரு வேலைவாய்ப்பு உங்களுக்கு வந்தால் என்ன செய்வீர்கள்? உடனே அந்நாட்டைப் பற்றி ஆராய ஆரம்பிப்பீர்கள் அல்லவா? ஆராய்ந்து அந்நாட்டின் பொருளாதார சீதோஷ்ண மற்றும் அரசியல் சூழ்நிலைகளை தீரவிசாரித்து அதற்கேற்ற முன்னேற்பாடுகளைச் செய்வீர்கள்தானே! நாளை நாம் நிரந்தரமாகத் தங்கவுள்ள இடத்தைக் குறித்து நாம் அலட்சியம் காண்பிக்க முடியுமா? அதற்கான முன்னேற்பாடுகளை செய்வதில் நாம் தாமதம் செய்யலாகுமா?

பகுத்தறிவு கொண்டு இறைவேதங்கள் கூறும் உண்மைகளை ஆராய்ந்தாலும் நமக்கு அதுதான் நாளை நடக்கும் என்பதையும்

**● நிச்சயமாக நாமே இந்த நினைவூட்டலை (குர்ஆனை) இறக்கியிருக்கிறோம். நிச்சயமாக நாமே இதைப் பாதுகாப்போம். (திருக்குர்ஆன் 15:9)**

# காத்திருக்கும் மறுமையும் மண்ணறையும்

மண்ணறையாவது, மறுமையாவது, மண்ணாங்கட்டியாவது...? எல்லாம் கற்பனை! முன்னோர்கள் எழுதி வைத்த கற்பனை ! என்று உதாசீனம் செய்பவர்கள் நம்மில் உண்டு. சற்றே நிதானமாக நாம் ஒவ்வொருவரும் கடந்து வந்த மற்றும் கடந்து செல்லும் கட்டங்களைப் பற்றி சிந்தித்தால் நமக்குப் பல உண்மைகள் புலப்படும்.

நாம் இவ்வுலகுக்கு தாய் வயிற்றிலிருந்து குழந்தையாக வெளிப்பட்டோம் என்பதையும் அதற்கு முன் கற்பத்தில் பத்து மாதங்கள் இருந்தோம் என்பதையும் நாம் நம்புகிறோம். அதே போல் இன்று வாழும் வாழ்வின் பல கட்டங்களைக் கடந்து நாம் மரணமடைந்த பின் புதைக்கப்பட அல்லது எரிக்கப்பட இருக்கிறோம் என்பதையும் நம்பத் தயாராக இருக்கிறோம்.

**இக்கட்டங்களுக்கு முந்தைய மற்றும் பிந்தைய நம் நிலை என்ன?**

இறைவேதங்களும் இறைத்தூதர்களும் பின்வருமாறு கூறுகிறார்கள்: நமது வாழ்வின் அடுத்தகட்டம் மண்ணறை வாழ்வு. அடுத்ததாக பயங்கரமான நிகழ்வுகளுக்குப் பின் உலகம் ஒருநாள் அழிக்கப்படும். அதைத் தொடர்ந்து மீண்டும் இறைவன் புறத்திலிருந்து கட்டளை வரும்போது அனைத்து மனிதர்களும் மீண்டும் விசாரணைக்காக உயிர்கொடுத்து எழுப்பப்படுவார்கள். அன்று நல்லவர்களுக்கு சொர்க்கமும் தீயோருக்கு நரகமும் விதிக்கப்படும். அதுதான் நமது நிரந்தர



*இருப்பிடமாக இருக்கும்*

*இவற்றை நம் புலன்களால் அறிய முடியாத நிலையில் நாம் உள்ளோம். ஆனால் நம் புலன்களுக்கு எட்டவில்லை என்ற காரணத்துக்காக அவற்றை மறுத்து விட முடியுமா? அவ்வாறு மறுப்பது என்பது பகுத்தறிவுக்கு இழுக்கு அல்லவா? புலன்களுக்கு எட்டும் தகவல்களை சேகரித்துக் கொண்டு எட்டாதவற்றை ஆராய்ச்சி செய்து அறிந்து கொள்வதைத்தான் பகுத்தறிவு என்கிறோம். அவ்வாறு ஆராயாமல் அப்பட்டமாக மறுப்பவர்களை எப்படி பகுத்தறிவுவாதிகள் என்று அழைக்க முடியும்? நம்மை மீறிய ஒரு சக்திக்கு உட்பட்டுதான் நாம் இக்கட்டங்களைக் கடந்து வருகிறோம் என்று உணர்ந்த பிறகும் எப்படி இவற்றை அப்பட்டமாக மறுக்க முடியும்? அது மடமையல்லவா? அது மட்டுமல்ல, இவற்றை மறுப்பதும் அலட்சியம் செய்வதும் நாளை நரகத்திற்கு இட்டுச்செல்லும் என்று கூறப்படும்போது இவற்றை அப்பட்டமாக மறுப்பதும் உதாசீனம் செய்வதும் பேராபத்தல்லவா?*

## அறிவுபூர்வமான வாதங்கள்

*மனிதன் பகுத்தாய்வு செய்து மறுமையை ஏற்றுக்கொள்ளும் வண்ணம் அறிவுபூர்வமான தன் வாதங்களை முன்வைக்கிறது திருக்குர்ஆன்.*

● *நம் கட்டுப்பாட்டில் இல்லாத பல கட்டங்களைக் கடந்து கொண்டிருக்கும் நம்மைப் பார்த்து இறைவன் கேட்கிறான்:*

**2:28. நீங்கள் எப்படி அல்லாஹ்வை நம்ப மறுக்கிறீர்கள்? உயிரற்றோராக இருந்த உங்களுக்கு அவனே உயிரூட்டினான் பின்பு அவன் உங்களை மரிக்கச்செய்வான் மீண்டும் உங்களை உயிர் பெறச் செய்வான் இன்னும் நீங்கள் அவன் பக்கமே திருப்பிக்கொண்டுவரப் படுவீர்கள்.**

● *மீண்டும் உயிர்த்தெழுதல் பற்றி சந்தேகம் கொண்டோரைப் பார்த்து அவன் சொல்கிறான்:*

**22:5 மனிதர்களே! மீண்டும் உயிர்ப்பிக்கப்படுவதில் நீங்கள் சந்தேகத்தில் இருந்தால் உங்களுக்குத் தெளிவுபடுத்துகிறோம். உங்களை மண்ணாலும், பின்னர் விந்தாலும், பின்னர் கருவுற்ற சினைமுட்டையாலும் பின்னர் முழுமைப்படுத்தப்பட்டதும் முழுமைப்படுத்தப்படாததுமான தசைக்கட்டியாலும் படைத்தோம். நாம் நாடியதைக் கருவறைகளில் குறிப்பிட்ட காலம் வரை நிலைபெறச் செய்கிறோம். பின்னர் உங்களைக் குழந்தையாக வெளிப்படுத்துகிறோம். பின்னர் உங்கள் பருவத்தை அடைகின்றீர்கள். உங்களில் கைப்பற்றப்படுவோரும் உள்ளனர். அறிந்த பின் எதையும் அறியாமல் போவதற்காக தள்ளாத வயது வரை கொண்டு செல்லப்படுவோரும் உங்களில் உள்ளனர். பூமியை வறண்டதாகக் காண்கிறீர். அதன் மீது நாம் தண்ணீரை இறக்கும் போது, அது செழித்து வளர்ந்து அழகான ஒவ்வொரு வகையையும் முளைக்கச் செய்கிறது.**

## வறண்ட பூமியின் மீது மழை நீர் பொழியும்போது

*வறண்ட பூமியின் மீது மழை நீர் பொழியும்போது அது உயிர் பெற்று அதில் புதிதாக தாவரங்கள் செழிப்பதுபோல் மீண்டும் நாம் உயிப்பிக்கப் படுவோம் என்கிறான் இறைவன்*

● **30:24. அச்சமும், ஆசையும் ஏற்படும்படி அவன் உங்களுக்கு மின்னலைக் காட்டுவதும் பிறகு வானத்திலிருந்து மழை பொழியச் செய்து, அதைக் கொண்டு பூமியை - அது (வரண்டு) இறந்த பின்னர்**

**உயிர்ப்பிப்பதும் அவன் அத்தாட்சிகளினின்றும் உள்ளன் நிச்சயமாக** அதில் சிந்தித்துணரும் சமூகத்திற்கு அத்தாட்சிகள் இருக்கின்றன.

## உயிரற்ற பொருட்களில் இருந்து உயிருள்ளவை

உயிரற்ற பொருட்களில் இருந்து உயிருள்ளவை வெளிப்படுவதும் உயிருள்ளவற்றிலிருந்து உயிரற்றவை வெளிப்படுவதும் நம் கண்முன்னே அன்றாடம் நடக்கும் அற்புதங்கள். இருந்தும் மீண்டும் நாம் உயிர்பிக்கப் படுவோம் என்று படைத்தவன் கூறுவதை நம்பாமல் இருக்க முடியுமா?

**● 30:19. அவனே உயிரற்றதிலிருந்து உயிருள்ளதை வெளிப்படுத்துகிறான் உயிருள்ளதிலிருந்து உயிரற்றதை வெளிப்படுத்துகிறான் இந்தப் பூமியை அது இறந்தபின் உயிர்ப்பிக்கிறான் இவ்வாறே (மரித்தபின் மறுமையில்) நீங்களும் வெளிப்படுத்தப்படுவீர்கள்.**

## நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்கா நகரில்..

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்கா நகரில் அவ்வூர் மக்களிடம் தனது சத்தியப் பிரசாரத்தை செய்து கொண்டிருந்த வேளை மறுமை வாழ்வைப் பற்றி எச்சரித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது மக்களில் சிலர் இறந்துபோன மனிதர்களின் மக்கிப் போன எலும்புகளைக் கொண்டுவந்து காட்டி நபிகள் நாயகத்திடம் இளக்காரமாகக் கேட்டார்கள்: “இவற்றையா நீர் மீண்டும் உயிர்பெற்று வரும் என்று சொல்கிறீர்?”.

அவர்களுக்கு பதில் கூறும் விதமாக இறைவன் தன் புறத்திலிருந்து கீழ்கண்ட திருமறை வசனங்களை இறக்கி வைத்தான்:

**● 36: 77-80. மனிதனை விந்திலிருந்து படைத்தோம் என்பதை அவன் பார்க்கவில்லையா? அவனோ பகிரங்கமாக எதிர்வாதம் புரிகிறான். அவன் நமக்கு உதாரணம் கூறுகிறான். அவனை (நாம்) படைத்திருப்பதை அவன் மறந்து விட்டான். ‘‘எலும்புகள் மக்கிய நிலையில் அதை உயிர்ப்பிப்பவன் யார்?‘‘ என்று கேட்கிறான்**
**‘‘முதல் தடவை இதை யார் படைத்தானோ அவன் இதை உயிர்ப்பிப்பான். அவன் ஒவ்வொரு படைப்பையும் அறிந்தவன்‘‘‘ என்று கூறுவீராக!**
**அவன் பசுமையான மரத்திலிருந்து உங்களுக்காக நெருப்பை ஏற்படுத்தினான். அதிலிருந்து நீங்கள் தீ மூட்டுகிறீர்கள்.**

தொடர்ந்து மனிதனைச் சிந்திக்கச் சொல்கிறான்:

**● 36: 81.82 வானங்களையும், பூமியையும் படைத்தவன் இவர்களைப் போன்றவர்களைப் படைக்க சக்தி பெற்றவன் இல்லையா? ஆம்! அவன் மிகப் பெரிய படைப்பாளன் அறிந்தவன். ஏதேனும் ஒரு பொருளை அவன் நாடும் போது ‘‘ஆகு‘‘ என்று கூறுவதே அவனது நிலை.உடனே அது ஆகி விடும்.**

ஆம், அவ்வளவுதான் அவன் ‘ஆகு’ என்றால் ஆகி வந்தவர்கள்தானே நாம்! இவ்வுலகின் சொந்தக்காரன் அறுதியிட்டு உறுதியாகச் சொல்கிறான்:

**● 10:4. நீங்கள் அனைவரும் அவனிடமே மீண்டு செல்ல வேண்டியிருக்கிறது. அல்லாஹ்வின் வாக்குறுதி மெய்யானது - நிச்சயமாக அவன்தான் முதல் முறையாகப் படைத்தவன் நம்பிக்கை கொண்டு நேர்மையான முறையில் நற்கருமங்கள் செய்தவர்களுக்கு கூலி வழங்குவதற்காக படைப்பினங்களை மீண்டும் உயிர்ப்பிப்பான். யார் நிராகரித்து விட்டார்களோ அவர்களுக்கு அவர்கள் நிராகரித்த காரணத்தினால் கொதிக்கும் நீரும் நோவினைத் தரும் வேதனையும் உண்டு.**

# மரணம் நெருங்கிவிட்ட வேளை..

## நாத்திகத்தை நம்பி மோசம் போகாதீர்!

உயிர் என்பது ஒரு மாயை. மரணம்தான் அனைத்துக்கும் முடிவு. அதற்குப் பிறகு ஒன்றுமே நடைபெற வாய்ப்பில்லை. என்றெல்லாம் நாத்திகர்கள் பிதற்றுவதை வேதவாக்காக பின்பற்றும் பலரும் நிறைந்து வருவதால்தான் மக்களிடையே இருக்கும் கொஞ்சநஞ்ச இறையச்சம் கூட காணாமல் போய்விடுகிறது.. நாடு குட்டிசுவராவதற்கு மிகப்பெரிய காரணம் கண்மூடித்தனமாகப் பரவிவரும் நாத்திகமே. இவற்றைப் புரிந்துகொண்டால் ஏனென்று விளங்கும்:

1. நாத்திகர்களிடம் ஒருங்கிணைந்த கொள்கை என்பது கிடையாது.

காரணம் ஒவ்வொரு தனிமனிதனும் என்ன நினைக்கிறானோ அதுதான் நாத்திகத்தின் அடிப்படை.

2.தான்தோன்றித்தனம் ஒருபோதும் தனிநபர் நல்லொழுக்கத்திற்கான அடிப்படையோ சித்தாந்தமோ தரமுடியாது என்பது தெளிவு. மனிதன் ஏன் ஒழுக்கம் பேணவேண்டும் என்ற கேள்விக்கு பதில் கிடையாது.

3. இனம், மொழி, நிறம், இடம் ஆகியவற்றால் இயல்பாகவே பிரிந்து கிடக்கும் மக்களை இணைக்கும்படியான எந்த தத்துவமும் கிடையாது. எனவே ஜாதி ஒழிப்பு என்று சொல்லி தியரி பேசமுடியுமே தவிர நடைமுறைத் தீர்வுகள் நாத்திகவாதிகள் தரமுடியாது.

4. சரி எது தவறு எது நீதி எது அநீதி எது என்று வரையறுக்க ஒரு அளவுகோல் (criterion) கிடையாது. எனவே அனைவருக்கும் பொதுவான தீர்வுகளோ சட்டங்களோ நாத்திகம் தரமுடியாது.

5.சமூக பிரச்சினைகளுக்கு நடைமுறை சாத்தியமான தீர்வுகள் கிடையாது. உதாரணமாக பெண்சிசுக்கொலை, வரதட்சணை, சாதிக் கொடுமைகளை எந்த அளவுக்கு நடைமுறையில் தீர்த்து உள்ளார்கள் என்ற கேள்விகளுக்கு பதில் கிடைக்காது. இன்னும் பல உள்ளன. அவற்றை நீங்களாகவே அறிந்து கொள்வீர்கள்.

### மரணம் நெருங்கிவிட்டால்..

ஒவ்வொரு மனிதனும் சந்திக்கக்கூடிய அந்த வேளையைப் படம் பிடித்துக் காட்டுகிறது திருக்குர்ஆன்.. ஆம், அதுதான் பிறந்தது முதலே உங்கள் உடலோடு ஒட்டி உறவாடிக் கொண்டு இருந்த உங்கள் உயிர்.... ஆருயிர்... இன்னுயிர்.... என்றெல்லாம் அழைப்பீர்களே அது உங்களை விட்டுப் பிரியும் வேளை.....

அக்காட்சியில் கதாநாயகன் வேறு யாருமல்ல... நீங்கள்தான்!.

அக்காட்சியை உங்களைச்சுற்றி பலரும் கண்டு கொண்டு நிற்கிறார்கள். ஆனாலும் உங்கள் கவனம் அவர்களின்மீது இல்லை. ஏனெனில் அவர்கள் காணாத ஒன்றையல்லவா நீங்கள் காண்கிறீர்கள்! அவ்வேளையில் உங்களுக்கு மட்டுமே புலப்படும் சில காட்சிகள் அவர்களுக்குப் புலப்படுவதில்லை. உயிர் பறிக்க வந்துள்ள வானவர் அல்லவா உங்கள்முன் நிற்கிறார்! உங்கள் முகம் நீங்கள் அனுபவித்துக்கொண்டு இருக்கும் வேதனைகளை வெளிப்படுத்துகிறது...... உங்கள் கால்கள்

ஒன்றோடு ஒன்று பின்னிக் கொள்கின்றன.....

உங்கள் தாய் தந்தை, மனைவி, மக்கள், சகோதரி, சகோதரர்கள், நண்பர்கள். கைவிரித்து விட்ட மருத்துவர்கள், என பெரும் பட்டாளமே அங்கு திரண்டுள்ளது...... ஆனால் யாராலும் எதையும் செய்ய முடியாத ஒரு சூழ்நிலை! அனைவருக்கும் உங்கள் மேல் அன்பும் உண்டு, அனுதாபமும் உண்டு.... இருந்தும் என்ன செய்ய? யாருக்கும் கட்டுப்படாத ஒன்றல்லவா உயிர் என்பது. அதுவல்லவா அங்கு பறிக்கப் படுகிறது!

## போன உயிரை மீட்ட முடிகிறதா பார்

அக்காட்சியை இன்னொருவனும் கண்டுகொண்டு நிற்கிறான். ஆம், உங்களைப் படைத்தவனும் இதுகாறும் பரிபாலித்து வந்தவனும் ஆன உங்கள் இறைவன்.... அக்காட்சியின் இயக்குனரும் அவன்தான்! இதோ அவனே அதை வர்ணிப்பதைப் பாருங்கள்!

**56:83 .மரணத் தறுவாயில் ஒருவனின் (உயிர்) தொண்டைக் குழியை அடையும் போது -**

**56:84. அந்நேரம் நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்.**

**56:85 .ஆயினும், நாமோ அவனுக்கு உங்களை விட சமீபமாக இருக்கிறோம். எனினும் நீங்கள் பார்க்கிறீர்களில்லை.**

அவ்வளவு அருகாமையில் அக்காட்சியை இயக்கிக்கொண்டிருக்கும் அவன் உங்களைப் பார்த்துக் கேட்கிறான் சற்றே செவிமடுத்துக் கேளுங்கள், இதோ உங்களுக்கு ஒரு சவால் விடுக்கிறான் முடிந்தால் எதிர்கொள்ளுங்கள்:

**56:86 எனவே, (மறுமையில் உங்கள் செயல்களுக்கு) கூலி கொடுக்கப்பட மாட்டீர்கள் என்று இருந்தால் -**

**56:87 நீங்கள் உண்மையாளராக இருப்பின், (அவ்வுயிரை) மீளவைத்திருக்கலாமே!**



**படைத்தவன் விடுக்கும் சவாலின் விவரம் இதுதான்:**

ஆம், நான்தான் உங்களுக்கு உயிரைக் கொடுத்தேன். எதற்காக? இந்தத் தற்காலிக உலகில் உங்களைப் பரீட்சிப்பதற்காக. அந்தப் பரீட்சை இன்றோடு முடிந்துவிட்டது. இனி மீதமிருப்பது பரீட்சையில் வென்றவர்களுக்கும் தோற்றவர்களுக்கும் கூலி கொடுப்பதுதான். இது எனது ஏற்பாடு. இதைத்தான் எனது தூதர்கள் மூலமும் வேதங்கள் மூலமும் உங்களுக்கு எடுத்துரைத்தேன். எனது ஏற்பாட்டில் உங்களுக்கு நம்பிக்கை இல்லையா? அப்படியென்றால் உங்கள் நம்பிக்கை எவ்வளவு சரியானது என்பதைப் பரீட்சித்துப் பார்க்கலாமே! நீங்கள்தான் சரி என்றால்......

**தடுத்து நிறுத்த முடிகிறதா பார்!**

இதோ சென்று கொண்டிருக்கிறதே ஓர் உயிர்... அதைக் கொஞ்சம் தடுத்து நிறுத்த முடிகிறதா பாருங்கள் அல்லது அதோ, சென்று விட்டதே அந்த உயிர்!.... அதை மீள வையுங்கள் பாப்போம்.

சற்றுமுன்னர் வரை இருந்த எல்லாமே இப்போதும் உங்கள் முன்னர் தானே உள்ளது. இதயம், நுரையீரல், மூளை, சிறுநீரகங்கள், ஜீரண அமைப்பு, கை கால்கள் என முழுமையான உடல், நவீன விஞ்ஞானம் கண்டுபிடித்துத் தந்த மாற்று அவையவங்கள், விஞ்ஞான வளர்ச்சியில் நீங்கள் கண்டுபிடித்து நிர்மாணித்த இயந்திரங்களும் உபகரணங்களும் தலைசிறந்த அறிவாளிகளின் பட்டாளமும் உச்சாணிக்கொம்பில் நின்றுகொண்டு இருக்கும் தொழில்நுட்பமும் என அனைத்துமே உங்கள் கைவசம்! எங்கே அந்த பறிக்கப் பட்ட உயிரை மட்டும் சற்று மீட்டு வாருங்கள் பாப்போம்!

பழுதடைந்த இதயத்தை, அல்லது சிறுநீரகத்தை அல்லது வேறு உறுப்புக்களை மாற்று அறுவைசிகிச்சைகள் மூலம் மாற்றினீர்கள். இருந்தும் அந்த உயிரை மட்டும் தக்க வைத்துக்கொள்ள முடியவில்லையே! ஏன்? இன்னும் இதோ இன்னொருவர்... இவருக்கு எந்த உறுப்புப் பழுதடையாமலே இருக்கிறதே. இருந்தும் என்ன தயக்கம்.... உயிர் மட்டும் தானே மிஸ்ஸிங்.... அதை மீட்டுக்கொண்டு வந்து விட்டால் மீண்டும் எழுந்து நடமாடுவார் அல்லவா? அதை மீட்டுவர ஏன் முடிவதில்லை?



## நாத்திக ஜாம்பவான்கள் எங்கே?

உயிர் என்பது வாஸ்தவமான ஒன்றுதானே, இல்லாத ஒரு பொருள் அல்லவே! சற்றுமுன் அந்த உடலுக்குள் இருந்ததற்கு நீங்களே சாட்சி! சுற்றி நிற்கும் உங்கள் அனைவரின் கண் முன்பாகவே எங்கே அது தப்பித்து ஓடியது? உங்கள் அதிநவீன நுண்ணோக்கிகளுக்கும் தொலைநோக்கிகளுக்கும் ஏன் அது மட்டும் தட்டுப்படாமல் போயிற்று?

கடவுள் இல்லை, இல்லவே இல்லை... கடவுளைக் கற்பித்தவன் முட்டாள், கடவுளை வணங்குபவன் காட்டுமிராண்டி என்று ஒரு அதிபுத்திசாலிகளின் கூட்டம் முழங்கிக் கொண்டு திரிந்ததே .... இன்னும் திரிந்துகொண்டு இருக்கிறதே அவர்களையாவது உதவிக்கு அழைத்துப் பாருங்கள்,

அவர்களிடம் ஏதாவது சூத்திரம் இருந்தால் பிரயோகித்துப் பார்க்கட்டுமே! விஞ்ஞானமே எல்லாம் என்று பீற்றிக்கொள்ளும் ஜாம்பவான்கள் எங்கே ஓடி ஒளிந்தார்கள்? அணுவாயுதங்களைத் திரட்டி தங்களது விரல் நுனியில்தான் உலகம் என்று மிரட்டிக் கொண்டிருக்கும் வல்லரசுகளின் ‘வல்லமை” இவ்விடயத்தில் எங்கே போனது?

இவ்வாறு மனிதனின் இயலாமையை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறான் வல்ல இறைவன்!

இனி, பிரிக்கப்பட்ட உயிருக்கு உரியவரின் கதி என்ன? இதோ தொடர்கிறான்.....

**56:88 (இறந்தவர் இறைவனுக்கு) நெருக்கமானவர்களில் நின்றும் இருப்பாராயின்.**

**56:89 அவருக்குச் சுகமும், நல்லுணவும் இன்னும் பாக்கியமுள்ள சுவர்க்கமும் உண்டு.**

**56:90. அன்றியும், அவர் வலப்புறத்துத் தோழராக இருந்தால்,**

**56:91 வலப்புறத்தோரே! உங்களுக்கு “சாந்தி உண்டாவதாக“ (என்று கூறப்படும்).**

அதாவது இவ்வுலகில் தனது நற்செயல்கள் மூலம் இறைவனுக்கு நெருக்கமாகி விட்டவராகவோ இறைவனின் திருப்தியைப் பெற்றுவிட்டவராகவோ அவர் இருந்தால் அவருக்கு கவலை இல்லை. ஆனால் அந்த பிரியும் உயிருக்கு உரியவர் இறைவன் வழங்கிய வாழ்க்கை நெறியையும் அவன் வேதத்தையும் தூதர்களையும் புறக்கணித்தவராக இருந்தால் அவரின் நிலை மிகவும் கவலைக்குரியதே!

**56:92 ஆனால் அவன் வழிகெட்டுப் பொய்யாக்குவோரில் (ஒருவனாக) இருந்தால்**

**56:93 கொதிக்கும் நீரே, அவனுக்கு விருந்தாகும்.**

**56:94. நரக நெருப்பில் தள்ளப்படுவது (விருந்தாகும்).**

மேற்கூறப்பட்டவை கட்டுகதைகளோ கற்பனைக் காவியங்களோ அல்ல, நாளை நடக்க இருக்கும் உண்மைகளாகும். இவை நடந்தே தீரும்! ஏனெனில் இவை இவ்வுலகின் உரிமையாளனின் வார்த்தைகளாகும்!


**56:95 நிச்சயமாக இதுதான் உறுதியான உண்மையாகும்.**

**56:96 எனவே (நபியே!) மகத்தான உம்முடைய இறைவனின் திருநாமத்தைக் கொண்டு துதி செய்வீராக.**

# மரணவேளையில் இருந்து மண்ணறை வரை

உயிர், மரணம், மரணத்திற்குப் பின் உயிர் எங்கே போகிறது? ஏன் அதைத் திருப்ப முடிவதில்லை என்ற கேள்விகளுக்கு நாத்திகம் தெளிவான பதிலைத் தரமுடிவதில்லை எனும்போது இவற்றைப் பற்றி தெரியாது என்று ஒப்புக் கொள்வதும் இவ்விடயங்களைப் பற்றி மேற்கொண்டு ஆராய்வதுமே அறிவியல் அணுகுமுறை. ஆனால் எல்லாம் ஏனெனில் விளைவுகளைப் உண்டாக்கும் எந்த விடயத்தையும் அப்பட்டமாக இல்லை என்று மறுப்பது அறிவியலுக்கும் சரி, பகுத்தறிவுக்கும் சரி நேர் எதிரானது.

உதாரணமாக மீன் போன்ற ஒரு நீர்வாழ் ஜீவிக்கு கரையில் நடப்புகளைப் பற்றி சரியாக அறிய வேண்டுமென்றால் கரைவாழ் ஜீவிகளுக்கு கொடுக்கப்பட்ட புலன்களும் ஆற்றலும் வழங்கப்பட்டாலே இயலும். தன் இயல்பை அல்லது வரம்பை மீறி அம்முயற்சியில் ஈடுபட்டு கரைக்கு வந்து விழுமானால் என்ன நடக்கும் என்பதை நாம் அறிவோம். அதேபோல கீழே கட்டுரையில் கூறப்படும் கருத்துக்களையும் நமக்குப் புரியவில்லை என்பதற்காக இவற்றை அலட்சியம் செய்வோர் வாசகர்களில் இருக்கலாம். ஆனால் ஒன்று. இவை நூறு சதவீதம் உண்மை! நீங்கள் மரணத்தை நெருங்குப் போதிலிருந்தே இவற்றை உணரப் போவது திண்ணம்.



### நல்லோர்களின் மண்ணறை வாழ்க்கை

நல்லவர்கள் மரணிக்கும்போது வானவர்கள் சந்தோஷமான வார்த்தைகளை அவர்களிடம் கூறுவார்கள். மரியாதையுடன் நடத்தப்படுவார்கள். சொர்க்கம் பரிசாக கிடைக்கப் போகிறது என்ற சுபச் செய்தியை மரணிக்கும் தருவாயில் வானவர்கள் கூறுவார்கள். எனவே தனது நிலை என்னவாகுமோ என்ற கவலை நல்லவர்களுக்கு இருக்காது. அவர்கள் நிம்மதியுடனும் சந்தோஷத்துடனும் மண்ணறை வாழ்க்கைக்குள் பிரவேசிப்பார்கள்.

இறைவன் கூறுகின்றான்:

- **“அமைதியுற்ற உயிரே! திருப்தியோடும் (இறைவனால்) திருப்தி கொள்ளப்பட்டும் உமது இறைவனிடம் செல்வாயாக! எனது அடியார்களில் சேர்ந்துக் கொள்வாயாக! எனது சொர்க்கத்தில் நுழைவாயாக! (அல்குர்ஆன்: 89 : 27)**

நல்லவர்களுக்கு மண்ணறை வாழ்வில் அழகான வரவேற்பு வானவர்களால் கொடுக்கப்படுகிறது. மதினாவாசி ஒருவருடைய பிரேத ஊர்வலத்தை பின் தொடர்ந்து நபி(ஸல்) அவர்கள் சென்றார்கள். பிரேதம் அடக்கம் செய்யப்பட்டதும் நபியவர்கள் மண்ணறைக்கருகில் அமர்ந்தார்கள். நங்களும் அவரைச் சுற்றி அமர்ந்தோம். நபி(ஸல்) அவர்கள் சிறிய கம்பு ஒன்றினால் நிலத்தைக் கீறிக் கொண்டிருந்தார்கள்.

திடீரென தன் தலையை உயர்த்தி “மண்ணறை வேதனையை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடிக் கொள்ளுங்கள்“ என்று மூன்று தடவைக் கூறினார்கள். பின்பு மரணத் தருவாயிலிலுள்ள ஒரு இறைநம்பிக்கையாளனுடைய நிலை பற்றி கூறினார்கள்:

● “இறைநம்பிக்கையாளனான ஒரு அடியான் உலகத் தொடர்புகளை துண்டித்து விட்டு மறுமையை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் போது சூரிய ஒளிக்கொப்பான பிரகாசமான முகத்துடன் வானிலிருந்து சில வானவர்கள் அவனிடம் வருவார்கள். அவர்கள் தங்களுடன் சுவர்க்கத்து துணிகளையும் சுவர்க்கத்து நறுமணத்தையும் வைத்துக் கொண்டு அவனுடைய பார்வைக்கு எட்டும் தூரத்தில் இருப்பார்கள். அப்போது உயிரைக் கைப்பற்றும் வானாவர் வந்து அவனருகில் அமருவார். அவனை நோக்கி நல்ல ஆத்மாவே! நீ இந்த உடலிலிருந்து வெளியேறி அல்லாஹ்வின் மன்னிப்பை நோக்கியும், அவனுடைய பொருத்தத்தை நோக்கியும் செல்“ என்று கூறுவார். தோல் பையிலிருந்து நீர் வழிந்து விடுவது போன்று அந்த ஆத்மா வெளியேறி விடும். அவர் அதனை எடுத்துச் செல்வார்.

அதனை அவர் எடுத்ததும் அருகிலுள்ள வானவர்கள் உடனே சுவர்க்கத்து துணியிலும், நறுமணத்திலும் அதனை வைத்த விடுவார்கள். அதிலிருந்து கஸ்தூரி வாடை வீசும். ஆந்த வானவர்கள் அதனை சுமந்தவர்களாக முதலாவது வானத்தை நோக்கி சென்று வானத்தை திறந்து விடுமாறு அதிலுள்ள வானவர்களிடம் கூறுவார்கள்.

அவ்வானவர்கள் வானத்தை திறந்து அந்த ஆத்மாவை வரவேற்பார்கள். ஒவ்வொரு வானத்திலும் இவ்விதமே நடைபெறும். ஏழாவது வானத்தை கடந்து சென்றதும் அல்லாஹ் ஆத்மாவை சுமந்து சென்ற வானவர்களை நோக்கி எனது இந்த அடியானுடைய செயல்களை இல்லியியீனிலே பதிவு செய்து விட்டும் பூமியிலுள்ள அவனது உடலில் அவனுடைய ஆத்மாவை சேர்த்து விடுங்கள்!

## தீயவர்களின் உயிர் கைப்பற்றப்படும் வேளை..

தீயவர்களின் உயிர் வாங்கப்படும்போதே அவர்களுக்கு வேதனை ஆரம்பமாகி விடுகிறது. இறைநிராகரிப்பாளர்களின் உயிர் வாங்கப்படும்போது அவர்களுக்குக் கொடுக்கப்படும் வேதனையைப் பற்றி பின்வரும் இறைவசனம் தெளிவுப்படுத்துகிறது.

● **“(ஏக இறைவனை) மறுப்போரின் முகங்களிலும், முதுகுகளிலும் வானவர்கள் அடித்து அவர்களைக் கைப் பற்றும் போது சுட்டெரிக்கும் வேதனையை அனுபவியுங்கள்! என்று கூறுவதை நீர்ப் பார்க்க வேண்டுமே!“ (அல்குர்ஆன்: 8:50)**

கெட்டவன் மரணித்தவுடன் அவனது உயிரை வானவர்கள் எடுத்துச் செல்லும்போதே அவனுடைய இழிவையும் அவமானத்தையும் அடையும் விதத்தில் வானவர்கள் அவனுக்கு மோசமான வரவேற்பு கொடுப்பார்கள்.

● இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: “இறைமறுப்பாளன் இந்த உலகத்தை விட்டுப் பிரிந்து மறுமையை நோக்கியவனாக இருக்கும் போது கறுப்பு முகங்களைக் கொண்ட வானவர்கள் வானத்திலிருந்து அவனிடம் வருவார்கள். (உயிரைக் கொண்டுச் செல்வதற்காக) அவர்களுடன்

துணிகள் இருக்கும். அவனது பார்வை எட்டும் தூரத்தில் வானவர்கள் அமர்ந்திருப்பார்கள்.

பின்பு உயிரைக் கைப்பற்றும் வானவர் வந்து அவனுடைய தலைக்கு அருகில் அமருவார். "கெட்ட ஆன்மாவே! அல்லாஹ்வின் கோபத்துடனும் அதிருப்தியுடனும் நீ வெளியேறு!" என்று கூறுவார். அப்போது அவன் உடலிலிருந்து உயிர் பிரித்தெடுக்கப்படும். ஈரமான கம்பளியில் உள்ள ரோமத்தை பிடுங்குபவரைப் போல் வானவர் உயிரை வாங்குவார். உயிரை வாங்கிய பிறகு கண் சிமிட்டும் நேரம் கூட தன் கையில் வைத்திருக்காமல் உடனே அந்த துணிகளில் உயிரைச் சேர்த்து விடுவார்.

பூமியில் இறந்து அழுகிப்போன உடலிலிருந்து வெளிவரும் துர்நாற்றத்தைப் போன்ற கெட்ட வாடை அதிலிருந்து வெளியேறிக் கொண்டிருக்கும். இந்த (கெட்ட) உயிருடன் (வானில்) வானவர்கள் ஏறிச் செல்வார்கள். அந்த உயிருடன் வானவர் கூட்டத்தை அவர்கள் கடந்து செல்லும் போதெல்லாம் இந்த கெட்ட ஆன்மா யாருடையது? என்று வானவர்கள் கேட்காமல் இருக்க மாட்டார்கள். உலகில் அவன் அழைக்கப்பட்டுக் கொண்டிருந்த கெட்ட பெயரைக் கூறி இன்னாருடைய மகன் இன்னார் தான் என்று கூறுவார்கள்.

அவன் முதல் வானத்திற்கு கொண்டு செல்லப் பட்டு அவனுக்காக கதவைத் திறக்குமாறு கேட்கப்படும். ஆனால் அவனுக்கு கதவு திறக்கப்படாது. அல்லாஹ்வின் தூதர்(ஸல்)அவர்கள் இந்த வசனத்தை ஓதிக் காட்டினார்கள்.

● **"நமது வசனங்களை பொய்யெனக் கருதி அதைப் புறக்கணிப்போருக்கு வானத்தின் வாசல்கள் திறக்கப்பட மாட்டாது. ஊசித்துவாரத்தில் ஒட்டகம் நுழையும் வரை அவர்கள் சொர்க்கத்தில் நுழைய மாட்டார்கள். இவ்வாறே குற்றவாளிகளை தண்டிப்போம்."** (7: 40)

கடைசியில் பூமியில் உள்ள சிஜ்ஜீன் என்ற ஏட்டில் இவனது கணக்கை பதிவு செய்யுங்கள் என்று சங்கையும் மகத்துவமும் மிக்க அல்லாஹ் கூறுவான். (அறிவிப்பவர்: பரா இப்னு ஆஸிப் (ரலி) அஹ்மத்)

தனக்கு கிடைத்துள்ள கஷ்டமான வாழ்வை நினைத்து கெட்டவர் அலறி கொண்டிருப்பார். தனக்கு கிடைத்துள்ள இன்பமான வாழ்வை எதிர்பார்த்தவராக நல்லவர் காத்துக் கொண்டிருப்பார். மரணித்த உடனேயே தீயவர்களின் புலம்பலும் நல்லவர்களின் சந்தோஷமும் ஆரம்பித்து விடுகின்றது. இருவரில் யாராக இருக்க வேண்டும் என்று நீங்கள் ஆசைப்படுகிறீர்கள்? சிறிது சிந்தித்துப் பாருங்கள்.

# நல்லோர்க்கு மறுமையில் கிட்டும் பரிசு

**(அவர்களில்) எவர்கள் இறைநம்பிக்கை கொண்டு, நன்மையான காரியங்களைச் செய்கின்றார்களோ அவர்களை சுவனபதிகளில் புகுத்துவோம், அவற்றின் கீழே ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும். அவற்றில் அவர்கள் என்றென்றும் இருப்பர் அங்கு அவர்களுக்குப் பரிசுத்தமான துணைவியர் உண்டு. அவர்களை அடர்ந்த நிழலிலும் நுழையச் செய்வோம். (திருக்குர்ஆன் 4:57)**

# மரண சிந்தனை மானுடத்தை வாழவைக்கும்!

- அலுவல்களிலோ தொழிலிலோ எவ்வளவுதான் ஆழமாக மூழ்கி இருந்தாலும் அது வரும்போது அதற்கு முன்னுரிமை அளிக்காதவர்களே கிடையாது.
- எந்த வித முன்னறிவிப்பும் செய்யாமல் திடீரெனவும் அது வரும்!
- சில சமயம் சிலருக்கு சிறு முன்னறிவிப்போடும் வரும்!
- நாம் பிறந்தது முதல் நம்மோடு ஒட்டிக்கொண்டு வருவது அது!
- நமது கண்களுக்குப் புலப்படாதது அது!
- பிறருக்கு அது வரும்போதுதான் அப்படி ஒன்று இருப்பதையே நாம் உணர்கிறோம்!
- நாம் எவ்வளவு வெறுத்தாலும் நம்மை விட்டுப் பிரியாதது!
- அது வந்துவிட்டால் நமது உறவினர் நம்மை விட்டுப் பிரிந்து விடுவார்கள்.
- நமது செல்வம் நம்மிடம் இருந்து பறிபோய்விடும்.

ஆம் அன்பர்களே அது வேறு ஒன்றும் அல்ல , நமக்கு அனைவருக்குமே கசக்கும் தவிர்க்க முடியாத உண்மை - மரணம் என்ற உண்மை!

அதைப்பற்றி பேசுவது அபசகுனம் என்று பலரும் வெறுப்பதை நாம் பார்க்கலாம். ஆனால் மிக மிக முக்கியமாக அனுதினமும் அடிக்கடி நினைவு கூற வேண்டிய ஒரு வாஸ்தவம் அது! அந்த அன்னியோன்யமான உண்மையை எந்த அளவுக்கு மனிதன் மறக்கிறானோ அந்த அளவுக்கு அதர்மம் தலைவிரித்தாடும், கலவரங்களும் அமைதி இன்மையும் பெருக்கெடுத்தோடும். மனிதன் இந்த மாபெரும் உண்மையை மறந்து போவதால்தான் அவனை அகங்காரமும் தலைக்கனமும் ஆட்டிபடைக்கின்றன. எனவேதான் நம்மைப் படைத்தவன் இந்த உண்மையை தன் திருமறையில் அடிக்கடி நினைவூட்டுகிறான்.

- **4:78 "நீங்கள் எங்கிருந்தபோதிலும் உங்களை மரணம் அடைந்தே தீரும். நீங்கள் மிகவும் உறுதியாகக் கட்டப்பட்ட கோட்டைகளில் இருந்த போதிலும் சரியே! ....."**

'நான் இன்று வாழ்ந்து கொண்டிருப்பது ஒரு தற்காலிகமான வாழ்வுதான். மரணம் வந்தால் நான் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கும் அனைத்தையும் விட்டுச்செல்ல வேண்டியுள்ளது. என்னைப் படைத்து பரிபாலித்து வருபவன் என்னை மீண்டும் உயிர்கொடுத்து எழுப்புவான், அவனுக்கு நான் என் செயல்களுக்காக பதில் சொல்லியாக வேண்டும், எனது புண்ணியங்கள் பாவங்களை விட அதிகமாக இருந்தால் எனக்கு நிரந்தர சொர்க்க வாழ்வு கிடைக்கும், எனது பாவங்கள் புண்ணியங்களை மிகைத்தால் என் நிரந்தர வாழ்வு நரகத்தில்தான்' என்ற உண்மை ஒவ்வொரு மனித மனங்களுக்குள்ளும் விதைக்கப்பட வேண்டும்.

அந்த அடிப்படையில் 'எனது இந்த தற்காலிக வாழ்வு என்பது ஒரு பரீட்சை போன்றது, இதில் நான் என்னைப் படைத்தவன் விரும்பும் செயல்களைச் செய்து அதிகமதிகமாக புண்ணியங்களை சம்பாதிக்க வேண்டும். இறைவன் தடுத்துள்ள மற்றும் வெறுக்கும் காரியங்களைச் செய்து

*பாவங்களைச் சம்பாதிக்கக் கூடாது' என்ற கடமை உணர்வு பிஞ்சு மனங்களில் அவை சிந்திக்கும் பருவம் முதலே ஊட்டப் படவேண்டும்.*

## மரணத்தை மறக்கடித்தால் அதர்மம் பெருகும்

*மரணம் பற்றிப் பேசுவது 'அபசகுனம்' அல்லது 'சந்தோஷத்தைக் கெடுக்கும்' அல்லது 'மூட் அவுட்' ஆக்கிவிடும்' என்றெல்லாம் சொல்லி இந்த மாபெரும் உண்மையை மறக்கச் செய்தோமானால் அது நீதி உணர்வற்ற மற்றும் குற்ற உணர்வில்லாத தலைமுறைகளைத்தான் உருவாக்கும் என்பதில் ஐயமில்லை.*

*ஆனால் மனிதன் புனிதனாக வளர வேண்டுமானால் அவனுக்கு மரணம் பற்றிய சிந்தனையும் மறுமை வாழ்வு பற்றிய சிந்தனையும் படைத்தவனின் வார்த்தைகளைக் கொண்டு நினைவூட்ட வேண்டும். இதோ இறைவனின் இறுதி வேதத்திலிருந்து சில வரிகள்:*

- **21:35 ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தைச் சுவைப்பதாகவே இருக்கிறது. பரீட்சைக்காக கெடுதியையும், நன்மையையும் கொண்டு நாம் உங்களைச் சோதிக்கிறோம். பின்னர், நம்மிடமே நீங்கள் மீட்கப்படுவீர்கள்.**
- **62:8 "நீங்கள் எதை விட்டும் விரண்டு ஓடுகிறீர்களோ, அந்த மரணம் நிச்சயமாக உங்களை சந்திக்கும். பிறகு, மறைவானதையும் பகிரங்கமானதையும் நன்கறிந்தவனிடம் நீங்கள் கொண்டு மீட்டப்படுவீர்கள் - அப்பால், அவன் நீங்கள் செய்து கொண்டிருந்தவை பற்றி உங்களுக்கு அறிவிப்பான்" (என்று) (நபியே!) நீர் கூறுவீராக.**
- **63:10 உங்களில் ஒருவருக்கு மரணம் வருமுன்னரே, நாம் உங்களுக்கு அளித்த பொருளிலிருந்து, தான தர்மம் செய்து கொள்ளுங்கள்.**

*இவ்வாழ்க்கை என்ற பரீட்சையின் இறுதி வெற்றி சொர்க்கத்தை அடைவதிலேதான் உள்ளது என்ற உணர்வு ஊட்டப்ப்படும்போது மனிதன் கஷ்டங்களை தாங்கிக் கொள்வதற்கும் தியாகங்களை மேற்கொள்வதற்கும் தயாராகிறான்.*

- **3:185 ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தைச் சுகித்தே ஆகவேண்டும். அன்றியும் - இறுதித் தீர்ப்பு நாளில்தான், உங்க(ள் செய்கைக)ளுக்குரிய பிரதி பலன்கள் முழுமையாகக் கொடுக்கப்படும். எனவே எவர் (நரக) நெருப்பிலிருந்து பாதுகாக்கப்பட்டுச் சுவர்க்கத்தில் பிரவேசிக்குமாறு செய்யப்படுகிறாரோ அவர் நிச்சயமாக வெற்றியடைந்து விட்டார். இவ்வுலக வாழ்க்கை மயக்கத்தை அளிக்கவல்ல (அற்ப இன்பப்) பொருளேயன்றி வேறில்லை.**

## உறக்கமும் சிறு மரணமே

*இம்மரணம் பற்றியோ மறுமை பற்றியோ கண்ணை மூடிக்கொண்டு நம்ப வேண்டாம். மாறாக பகுத்தறிவு கொண்டு சிந்தித்து உணரச் சொல்கிறான் இறைவன். மரணம் என்பது நாம் அன்றாடம் அனுபவித்து வரும் ஒன்று. மரணத்தின்போது மனிதனின் ஆத்மா கைப்பற்றப்படுவது போலவே தினமும் நாம் உறங்கும்போது நமது ஆத்மா இறைவனால் கைப்பற்றப்ப்டுகிறது என்பதுதான் உண்மை. எனவேதான் நாம் உறங்கும்போது நம்மால் நம்மைச்சுற்றி நடப்பவைகளைக் குறித்து அறிய முடிவதில்லை. கீழ்கண்ட இறைவரிகள் இதை உணர்த்துகின்றன:*

- **39:42 அல்லாஹ், உயிர்களை அவை மரணிக்கும் போதும்,**

மரணிக்காதவற்றை அவற்றின் நித்திரையிலும் கைப்பற்றி, பின்பு எதன் மீது மரணத்தை விதித்துவிட்டானோ அதை(த் தன்னிடத்தில்) நிறுத்திக் கொள்கிறான், மீதியுள்ளவற்றை ஒரு குறிப்பிட்ட தவணை வரை (வாழ்வதற்காக) அனுப்பி விடுகிறான் - சிந்தித்துப் பார்க்கும் மக்களுக்கு, நிச்சயமாக அதில் அத்தாட்சிகள் இருக்கின்றன.



ஆம் அன்பர்களே, அனுதினமும் நமது உயிர்கள் இறைவன்பால் போய் வருகின்றன. ஒருநாள் போன உயிர் திரும்பாமலும் போகலாம்! எனவேதான் நபிகள் நாயகம் (ஸல்) இரவில் படுக்கைக்கு செல்லும் போது கீழ்கண்டவாறு பிரார்த்திக்கக் கற்றுக் கொடுத்தார்கள்:

- "இறைவா, உன் பெயரால் நான் மரணிக்கவும் வாழவும் செய்கிறேன்"

அதேபோல் காலையில் கண்விழித்தால் போன உயிர் திரும்பிக் கிடைத்ததற்காக நன்றி சொல்லக் கற்றுத் தருகிறார்கள் நபிகளார்:

- "என்னை மரணிக்கச் செய்த பின் உயிர் தந்த இறைவனுக்கே புகழ் அனைத்தும். அவனிடமே நமது மீட்சியும் உள்ளது."

### அன்றாட நிகழ்வுகளில் பாடங்கள்

மரணத்திற்குப் பின் இறைவனிடம் மீட்டப்படுவது பற்றி சந்தேகத்திலிருப்போரை அவர்களின் சுற்றுமுற்றும் நடக்கும் அன்றாட நிகழ்வுகளைப் பார்த்துப் பாடம் பெறச் சொல்கிறான் இறைவன்:

- 7:185 வானங்கள், பூமி, இவற்றின் ஆட்சியையும் அல்லாஹ் படைத்திருக்கும் மற்றப் பொருள்களையும் அவர்கள் நோட்டமிடவில்லையா? அவர்களுடைய (மரண) தவணை நெருங்கியிருக்கக்கூடும் என்பதையும் (அவர்கள் சிந்திக்க வில்லையா?) இதற்குப் பின்னர் எந்த விஷயத்தைத்தான் அவர்கள் நம்பிக்கை கொள்ளப் போகிறார்கள்?
- 43:11 அவன்தான் வானத்திலிருந்து மழையை அளவோடு இறக்கி வைக்கிறான். பின்னர், அதனைக் கொண்டு இறந்து கிடந்த பூமியை நாம் தாம் உயிர்ப்பிக்கின்றோம். இவ்வாறே நீங்களும் (மரணத்திற்கு பின் உயிர்ப்படுத்தப் பெற்று) வெளிப்படுத்தப்படுவீர்கள்.
- 23:80 அவனே உயிர் கொடுக்கிறான். இன்னும் அவனே மரணிக்கச் செய்கிறான். மற்றும், இரவும் பகலும் மாறி மாறி வருவதும் அவனுக்குரியதே! (இவற்றை) நீங்கள் விளங்கிக் கொள்ளமாட்டீர்களா?

## தீயோருக்கு கிடைக்கும் நரகம்

- நிச்சயமாக நரகம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது. வரம்பு மீறிவர்களுக்குத் தங்குமிடமாக. அதில் அவர்கள் பல யுகங்களாகத் தங்கியிருக்கும் நிலையில். அவர்கள் அதில் குளிர்ச்சியையோ, குடிப்பையோ சுவைக்கமாட்டார்கள். கொதிக்கும் நீரையும் சீழையும் தவிர. (அதுதான் அவர்களுக்குத்) தக்க கூலியாகும்.(திருக்குர்ஆன் 78:21-26)

# மண்ணறைக்குள் என்ன நடக்கிறது?

அன்பார்ந்த சகோதரர்களே கீழேக் கூறப்படுபவை ஏதோ முஸ்லிம் விவகாரம். அவர்களுக்கு இப்படியெல்லாம் நடக்கும் போலிருக்கிறது. நமக்கு இதனால் எந்த பாதிப்பும் இல்லை என்று கடந்து போய் விடவேண்டாம். இல்லை ஏதோ கனவு போலிருக்கும் என்றும் கடந்து போக வேண்டாம். இவையனைத்தும் இன்று நீங்கள் எவ்வாறு உணர்வுடன் உள்ளீர்களோ உயிரோடும் உடலோடும் இங்கு இன்பத்தையும் வேதனைகளையும் சுகத்தையும் துக்கத்தையும் அனுபவிக்கிறீர்களோ அதைப் போலவே அங்கேயும் - அதாவது நமது அடுத்தகட்ட வாழ்விடமான மண்ணறையிலும் அனுபவிப்பீர்கள். அது எவ்வாறு நிகழும்? அது வேறு பரிமாணம். எப்படி மீனின் உதாரணத்தில் கூறியிருந்தோமோ- அந்த பரிமாணத்தை- கட்டத்தை- அடையும்போது உணரவே போகிறீர்கள்.

● “அடியான் மண்ணறையில் அடக்கம் செய்யப்பட்டு அவனுடைய தோழர்கள் திரும்பிச் செல்லும்போது, அவன் அவர்களின் செருப்பின் ஓசையைச் செவியேற்பான். அப்போது இரண்டு வானவர்கள் அவனிடம் வந்து அவனை எழுப்பி உட்கார வைத்து, ‘இந்த மனிதரைப் பற்றி என்ன கருதிக் கொண்டிருந்தாய்?’ என்று முஹம்மத்(ஸல்) அவர்கள் குறித்துக் கேட்பர். அவன் இறைநம்பிக்கையாளனாக இருந்தால் ‘இவர் அல்லாஹ்வின் அடியாரும் தூதருமாவார் என நான் சாட்சி கூறுகிறேன்’ எனக் கூறுவான்.

அவனிடம் (நீ கெட்டவனாய் இருந்திருந்தால் உனக்குக் கிடைக்கவிருந்த) நரகத்திலுள்ள உன்னுடைய இருப்பிடத்தைப் பார். (நீ நல்லவனாக இருப்பதால்) அல்லாஹ் இதை மாற்றி உனக்குச் சொர்க்கத்தில் இருப்பிடத்தை ஏற்படுத்தியுள்ளான் எனக் கூறப்படும். இரண்டையும் அவன் ஒரே நேரத்தில் பார்ப்பான்...அவனுக்கு மண்ணறை விசாலமாக்கப்படும்” என்றும் இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

நயவஞ்சகனாகவோ நிராகரிப்பவனாகவோ இருந்தால் ‘இந்த மனிதர் விஷயத்தில் நீ என்ன கருதிக் கொண்டிருந்தாய்?’ என அவனிடம் கேட்கப்படும்போது ‘எனக்கொன்றும் தெரியாது மக்கள் சொல்லிக் கொண்டிருந்ததையே நானும் சொல்லிக் கொண்டிருந்தேன்’ எனக் கூறுவான். உடனே ‘நீ அறிந்திருக்கவுமில்லை: (குர்ஆனை) ஓதி (விளங்கி)யதுமில்லை” என்று கூறப்படும். மேலும் இரும்பு சுத்திகளால் அவன் கடுமையாக அடிக்கப்படுவான். அப்போது அவனை அடுத்திருக்கும் மனிதர்களையும் ஜின்களையும் தவிர மற்ற அனைத்துமே செவியுறும் அளவுக்கு அவன் அலறுவான்” என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அனஸ் இப்னு மாலிக் (ரலி)ஆதாரம் : புகாரி.

நமது நாளைய இருப்பிடமான மண்ணறையில் நல்வாழ்வு வாழ இன்றே நாம் அதற்குத் தகுதி உள்ளவர்களாக நம்மை மாற்றிக் கொள்வோம் வாரீர்!

# மரணத்தை நெருங்கியவரை நரகத்தில் இருந்து காப்பாற்ற முடியுமா?

மனிதனின் வாழ்வின் க்ளைமாக்ஸ் கட்டம் மரணம் அவனை வந்தடையும் நேரம்... மிகப் பரபரப்பான அந்த நேரத்திலும் கூட அந்த மனிதன் ஒத்துழைத்தால் அவனைக் காப்பாற்றிவிட முடியும்.... மரணத்திலிருந்து அல்ல... அதைவிட விபரீதமான வேதனைகளில் இருந்து...உண்மையில் மரணம் என்பது ஒரு முடிவல்ல. மாறாக ஒரு தொடக்கம் என்பதே பகுத்தறிவு கொண்டு ஆராயும் எவரும் கண்டடையும் முடிவாகும். இம்மாபெரும் பிரபஞ்சத்தில் மிகமிக நுண்ணிய ஜீவிகளான நாம் நமது நீர்க்குமிழி போன்ற தற்காலிக வாழ்வையும் இயல்புகளையும் பகுத்தறிவு கொண்டு ஆராயும்போது இறைத்தூதர்களும் இறைவேதங்களும் சொல்பவை உண்மையே என்பது புலனாகும். அதாவது இந்த உலகம் என்ற தற்காலிக பரீட்சைக் கூடத்தில் படைத்த இறைவனுக்கு நன்றி உணர்வோடு அவனுக்குக் கீழ்படிந்து வாழ்வோருக்கு சொர்க்கமும் கீழ்படியாது தான்தோன்றித்தனமாக வாழ்வோருக்கு நரகமும் வாய்க்க உள்ளன என்பதே அந்த உண்மை.

ஆக, வாழ்க்கைப் பரீட்சையில் வெற்றியடைந்து இதன் அடுத்தகட்டமான மறுமையில் சொர்க்கம் புக வேண்டுமானால் படைத்த இறைவனை அறிந்து அவனை வணங்குவது என்பது முக்கியமான நிபந்தனையாகும்.

இவ்வுலகைப் படைத்து பரிபாலித்து வருபவன் எவனோ அவன் மட்டுமே மனிதர்களின் வணக்கத்திற்குத் தகுதி வாய்ந்தவன் என்பதும் பகுத்தறிவு நமக்கு உரைக்கும் அடுத்த உண்மையாகும். அவன் அல்லாத அனைத்தும் படைப்பினங்களே. அவற்றை வணங்குவதும் அவற்றிடம் பிரார்த்திப்பதும் பொய்யான கற்பனையும் வீணும் ஆகும். அது உண்மை இறைவன் நமக்கு வழங்கிவரும் எண்ணற்ற அருட்கொடைகளுக்கு செய்யும் நன்றிகேடாகும்.

மேலும் அப்படிப்பட்ட ஒரு செயல் இறைவனைப்பற்றிய மதிப்பு மற்றும் மரியாதை உணர்வை மனித மனங்களில் இருந்து போக்கி விடுவதால் இறையச்சம் என்பது இல்லாமல் போகிறது. அதனால் சமூகத்தில் பாவங்கள் அதிகரிக்க காரணமாகிறது. அச்செயல் கடவுளின் பெயரால் இடைத்தரகர்கள் மோசடி நடத்தி மக்களை ஏய்த்துப் பிழைக்க வழிவகுக்கிறது. மனிதகுலத்துள் பிரிவினை உண்டாகவும் அது காரணமாகிறது. பல்வேறு குழப்பங்களுக்குக் காரணமான இந்தப் பாவத்தை திருக்குர்ஆனில் இறைவன் வன்மையாகக் கண்டிக்கிறான்.

● **நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணைவைப்பதை (இறைவன் அல்லாதவற்றை வணங்குவதை) மன்னிக்கமாட்டான் இதைத்தவிர, (மற்ற) எதையும் தான் நாடியவர்களுக்கு மன்னிப்பான் யார் அல்லாஹ்வுக்கு இணைவைக்கிறார்களோ அவர்கள் நிச்சயமாக மிகவும் பெரிய பாவத்தையே கற்பனை செய்கின்றார்கள்.. (திருக்குர்ஆன் 4:48)**

(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன் என்பது பொருள்)

· ● **அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்போருக்கு சொர்க்கத்தை அல்லாஹ் விலக்கப்பட்டதாக ஆக்கி விட்டான். அவர்கள் சென்றடையும் இடம் நரகம். அநீதி இழைத்தோருக்கு எந்த உதவியாளர்களும் இல்லை (திருக்குர்ஆன் 5:72)**

● நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் :

யார் அல்லாஹ்வுக்கு எதையும் இணைகற்பிக்காமல் அவனை சந்திக்கிறாரோ அவர் சுவர்க்கம் புகுவார். யார் இணை கற்பித்தவராக சந்திக்கிறாரோ அவர் நரகம் புகவார். அறிவிப்பு : ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரலி) நூல்: புகாரீ

## கடைசி வேளையிலும் காப்பாற்றும் கலிமா

மனிதர்கள் யாராயினும் மரணத்திற்கு முன்னராக இந்தப் பாவத்தில் இருந்து மீண்டு "படைத்த இறைவன் மட்டுமே வணக்கத்திற்குரியவன். அவனைத்தவிர யாருமே வணக்கத்திற்கு உரியவர் அல்ல" என்ற உறுதிமொழியை மனதார ஏற்று வாயால் மொழிந்தால் அவர்களின் பாவங்கள் மன்னிக்கபடுகின்றன. அவர் வாழ்க்கைப் பரீட்சையில் வெற்றி பெற்று மறுமையில் சொர்க்கம் செல்கிறார் என்று இஸ்லாம் கூறுகிறது.

'லாயிலாஹ இல்லல்லாஹ்' என்ற அந்த உறுதிமொழி வாசகமே கலிமா என்று இஸ்லாமிய வழக்கில் அறியப் படுகிறது. இதன் பொருள் "வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த இறைவன் அல்லாஹ்வைத் தவிர யாரும் இல்லை" என்பதாகும். அத்துடன் முஹம்மதுர் ரசூலுல்லாஹ் (முஹம்மது (ஸல்) அல்லாஹ்வின் தூதராவார்) என்று சேர்த்து சொல்வது கலிமாவின் விரிவாக்கமாகும்.

### கலிமாவைச் சொல்லிக் கொடுத்தல்:

ஒருவர் மரணத்தை நெருங்கி விட்டார் என்பதை நாம் உணரும் போது லாயிலாஹ இல்லல்லாஹ் என்று அவருக்குச் சொல்லிக் கொடுத்து நினைவூட்ட வேண்டும்.

● "உங்களில் மரணத் தருவாயில் உள்ளவர்களுக்கு லாயிலாஹ இல்லல்லாஹ் என்று சொல்லிக் கொடுங்கள்" என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூ ஸயீத் அல்குத்ரீ (ரலி) நூல்: முஸ்லிம் 1523, 1524

● "உங்களில் மரணிக்க உள்ளவர்களுக்கு லாயிலாஹ இல்லல்லாஹ் என்பதைச் சொல்லிக் கொடுங்கள். மரணிக்கும் போது எவரது கடைசிப் பேச்சு லாயிலாஹ இல்லல்லாஹ் என்று அமைந்து விடுகிறதோ அவர் என்றாவது ஒரு நாள் சொர்க்கத்தில் நுழைந்து விடுவார். இதற்கு முன்பு அவரிடமிருந்து எது ஏற்பட்டிருந்தாலும் சரியே" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி) நூல்: இப்னு ஹிப்பான்

● நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்சார்களில் ஒருவரை நோய் விசாரிக்கச் சென்ற போது (அவரை நோக்கி) மாமாவே! லாயிலாஹ இல்லல்லாஹ் எனச் சொல்வீராக! எனக் கூறினார்கள். அதற்கு அம்மனிதர் (நான் உங்களுக்கு) மாமாவா? சிறிய தந்தையா? என்று கேட்டார். அதற்கு

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நீங்கள் மாமாதான் எனக் கூறினார்கள். பிறகு அவர் "லாயிலாஹ இல்லல்லாஹ் என்று கூறுவது எனக்கு நன்மை பயக்குமா?" என்று கேட்டார். அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்"ஆம்" என்று பதிலளித்தார்கள்.

அறிவிப்பவர்: அனஸ் (ரலி) நூல்: அஹ்மத்

**முஸ்லிமல்லாதவருக்கும் கலிமா சொல்லிக் கொடுத்தல்:**

மரணத்தை நெருங்கியவர் முஸ்லிமல்லாதவர் என்றால் நாம் சொல்லிக் கொடுப்பதால் கடைசி நேரத்தில் அவர் ஏகத்துவக் கொள்கையை ஏற்றவராக மரணிக்கக்கூடும் என்று நாம் நம்பினால் அவர்களுக்கும் லாயிலாஹ இல்லல்லாஹ் என்பதை அதன் பொருளுடன் சொல்லிக் கொடுப்பது சிறந்ததாகும். அது நபிவழியுமாகும்.

# வாசகர் எண்ணம்

● கொலை கொலையாக தற்கொலைகள் இன்றைய இந்தியாவில் மிகவும் கொடூரமாக நடந்து கொண்டிருக்கின்றன. தடுப்பதற்கான வழிகள்தான் இன்று வரையும் கிடைக்கவில்லை. புள்ளி விவரங்களைத் தெளிவாகப் பதிவு செய்துள்ளீர்கள். வாழ்த்துக்கள்.

மேலும் இன்றைய மக்கள் கடன் பிரச்னையில்தான் மிகவும் நொந்து போய் உள்ளார்கள். ஆசையில் சீட்டு நடத்துவது, பிறகு அதை சரியாக கட்ட முடியாமல் போவது, சீட்டு மோசடி, குறிப்பாக மகளிர் சுய உதவி கடன்களிலும் ஊரை விட்டு ஓடிப் போய் விடுவது, மற்ற தோழிகள் மூலம் கடன் பெறுவது, இந்த மன உளைச்சல் மூலம் உயிரை மாய்த்துக் கொள்வது அல்லது கற்பை இழப்பது என தொடர்கதையாக தாராளமாக நடக்கின்றன. சிறியதாக கடன் வாங்கியவர்களை அரசாங்கம் மிரட்டுவது பெரியதாக வாங்கியவர்களை தப்பிக்க விடுவது போன்ற காரணங்களால் மக்கள் மிகவும் பாதிக்கப் பட்டுள்ளார்கள்.

இந்த நிகழ்வுகள் பற்றி ஊடகங்கள் மூலம் மக்களுக்கும் அரசாங்கங்கத்திற்கும் தெரிந்தாலும் அரசாங்கம் சந்தோசமாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதுதான் மிகவும் கொடுமையானது! என்ன செய்வது? இறைவனிடம்தான் நாம் அனைவரும் வட்டிக் கொடுமையில் இருந்து பாதுகாப்பு கோரி முறையிட வேண்டும்.

**- டி.எம். பெரோஸ்கான், தேனி**

● ஜனவரி இதழில் வாழ்வியல் சார்ந்த ஆன்மீக வழிகாட்டல்கள் தனித்துவமான சிறப்புடன் வழக்கத்தைவிடவும் மிக்கு அமைந்திருக்கின்றன. முக்கியமாக அஸ்திவாரம் இல்லாத ஆளுமை வளர்ப்பு, மன அமைதிக்கான மருந்துகள், வாழ்க்கை பயணத்தின் இலக்கை அறிந்து பயணித்தல் போன்ற கட்டுரைகள் குறிப்பிடத்தக்கவை

**- தஞ்சை. என்.ஜெ கந்தமாறன், சென்னை**

Printed, published &edited by A.Mohamed Kasim on behalf of House of Peace, No.501, 3rd cross, Syed Block, AS palya, Bangalore 560017 and printed at Print-O- Graph, Balaji complex, Sultanpet, Bangalore.Registered News paper in India No. KARTAM/2007/28173

வாசகர்கள் கீழ்கண்ட முறைகளில் சந்தா அனுப்பலாம்:

1. வங்கி மூலம் :

House Of Peace, ICICI bank, Indra Nagar branch, Bangalore. Account no. 016901013432

IFScode: ICIC0000169

*2.* **PAYTM** மூலம் சந்தா செலுத்த: இங்கு காணப்படும் **QR CODE** ஐ **SCAN** செய்து உங்கள் தொகையை செலுத்தலாம். தொடர்ந்து **9845373775** என்ற எண்ணுக்கு உங்கள் சந்தா எண் மற்றும் தொகை குறிப்பிட்டு **SMS** மூலம் தகவல் அனுப்பவும்.


**திருக்குர்ஆன் தமிழாக்கம் அன்பளிப்புப் பிரதி பெற விரும்பும் மாற்றுமத அன்பர்கள் கீழ்கண்ட எண்களில் தொடர்பு கொள்ளவும்:**

சென்னை: 9941227866, 9894442844, 8122264467(மயிலாப்பூர்), 9840572018 (நுங்கம்பாக்கம்), 9840527687 (பல்லாவரம்), 9087836393(தாம்பரம்), ஓசூர்: 9994713191 கிருஷ்ணகிரி: 9952862321 தர்மபுரி: 9842627171 கோவை: 9600800050 திருப்பூர்: 9150068919 குன்னூர்: 9843622246 ஊட்டி: 9843927014 ஈரோடு: 7373947869, 9942958888 உடுமலை: 9865051917 பழனி : 9894278528 பொள்ளாச்சி: 9843657426 சேலம்: 9994091364 திருச்சி: 9865446344, 9442709087 மதுரை: 9789341714 கும்பகோணம்: 9597285160 விழுப்புரம்: 9790290002 திருநெல்வேலி: 9786230030 தென்காசி :9443695979 வேலூர்: 9944656942 திருவண்ணாமலை: 9994564650, 9944905212 தூத்துக்குடி: 8148059038 இளையான்குடி: 9842081210 ராஜபாளையம்:7845033616 ராமநாதபுரம்:7418140634 பாம்பன்: 9043758656 அதிராம்பட்டினம் 9566811099 கே.ஜி.எ.ஃ.ப்: 9845217262

# இறைவன் இருக்கையில் கலக்கம் ஏன் கண்ணா?

(நபியே!) கூறுவீராக: "தங்கள் ஆன்மாக்களுக்குக் கொடுமை இழைத்துக் கொண்ட என் அடிமைகளே! அல்லாஹ்வின் கருணை பற்றி நம்பிக்கை இழந்துவிடாதீர்கள். திண்ணமாக, அல்லாஹ் எல்லாப் பாவங்களையும் மன்னித்து விடுகின்றான். அவன் பெரிதும் மன்னிப்பவனும், கருணையாளனும் ஆவான். (திருக்குர்ஆன் 39:53)

(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன் என்பது பொருள்)



From
**House of Peace**
PO Box No. 1726
Bangalore 560 017

Registered news paper in India No. KARTAM/2007/28173
Registered under Postal Regn.No. KRNA/BGE/1057/2018-2020
Posted at Bangalore PSO, Mysore road, Bangalore 560026 on 25th or 26th or 27th of every month. No. of pages:24+4
Licenced to post without prepayment. Licence No.WPP-308
Date of Publication: 25th of every month

(PRINTED MATTER)

To

.................................................................................

.................................................................................

.................................................................................

.................................................................................

# ஒன்றே குலம்! ஒருவனே இறைவன்!
# யாதும் ஊரே! யாவரும் உறவே!



❖ மனிதர்களே நாம் உங்களை ஓர் ஆணிலிருந்தும் பெண்ணிலிருந்தும் படைத்தோம். பிறகு நீங்கள் ஒருவருக்கொருவர் அறிமுகமாகிக் கொள்ளும் பொருட்டு உங்களை சமூகங்களாகவும் கோத்திரங்களாகவும் அமைத்தோம். (திருக்குர்ஆன் 49 :13)

❖ மனிதர்களே உங்களையும் உங்களுக்கு முன்னிருந்தோரையும் படைத்த உங்கள் இறைவனுக்கே அடிபணியுங்கள் (அவ்வாறு செய்வதனால் மட்டுமே) நீங்கள் உங்களைக் காப்பாற்றிக் கொள்ள முடியும்.
❖(திருக்குர்ஆன் 2:21.)

## இதுதான் உங்கள் உண்மை உறைவிடம் !

**மக்களை சுரண்டிப் பிழைக்கும் காலனியாதிக்க வாதிகள் உங்களைப் பிரித்தாள வகுத்த எல்லைக் கோடுகளை நம்பி மோசம் போகாதீர்கள் !**